உ

பாரதாமதா துணை.

புதிய பிளேட் நவீன கீதங்கள்

மிஸ் K. B. சுந்தராம்பாள்

S. V. சுப்பையா பாகவதர் T. M. காதர்பாக்ஷா

N. சுப்பிரமண்ய பாகவதர்

மற்றும் பல வித்வ சிரோண்மணிகளும் பாடிவரும்

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு

## ஆனந்த

# கிராமபோன் சங்கீதம்

2-ம் பாகம்.



மதுரை புதுமண்டபம், புத்தக வியாபாரம்

**V. கருப்பணபிள்ளையவர்களால்**

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1931. [விலை அணா 2.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| K. B. சுந்தராம்பாள் பாடிய புதிய பிளேட் பண்டித மோதிலால் நேரு ஆனந்த கிராமபோன் சங்கீதம் 1, 2, 3, 4 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை 4 பாகமும் ஒரே கட்டடம் | 0 | 6 | 0 |
| S. V. சுப்பையா பாகவதர் பாடிவருகிற பூங்கா விநோத சிங்காரப் பாட்டுகள் 1, 2 பாகம், பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் புதிய பிளேட் ஒரிஜினல் புதிய பபூன் பாட்டு 1, 2, 3 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை V. நடராஜ பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரைவீரசுவாமி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய தேசீயகீதம் | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய வேதாரண்யம் உப்புச் சத்யாக்கிரக கீதமென்னும் காங்கிரஸ் பாட்டு | 0 | 2 | 0 |
| கவிக்குஞ்சரம் அவர்கள் இயற்றிய நாட்டுத்திலகமென்னும் ராட்டுப் பாட்டு | 0 | 5 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்களும், இன்னும் இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு சவுகரியமாயும் கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்:—

**V. கருப்பண பிள்ளை,**

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

வந்தேமாதரம்.

## இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால்நேரு பரத்வ கீதம்.

இராகம்-இந்துஸ்தான்——தாளம்-ஆதி.

பல்லவி.

ஞான பண்டித மோதிலால்
நம்மைப் பிரிந்தார் (ஞா)

அநுபல்லவி.

ஆனந்த பவன அரண்மனை ராஜ யோகன்
ஆதி சொரூப ராணி மோகன் அருமைத்யாகன் (ஞா)

(தொகையறு)

தான மதின் கரைகண்ட நேருபி றக்குமுனந்
தந்தையைப் பறி கொடுத்தார்
தரணிமேல் தோன்றியொரு பன்னிரு பிராயத்தில்
சகல கலையும் படித்தார்
தேனமுத மொழிகொண்ட இண்டிபெண்டெண்டென்ற
திவ்ய சஞ்சிகை தொடுத்தார்
தீய 'டயர்' செய்திட்ட பாஞ்சாலப் படுகொலையைத்
தெரிந்து கண்ணீர் வடித்தார்
தீனர்களை ரட்சிக்க நியாயவாதஞ் செய்து
தீரனெனப் பேரெடுத்தார்

சிறுவயது முதலாக தேசாபிமானமே
சிறந்த பணியெனப் பிடித்தார்
ஈனமிகும் அந்நியத் துணியாவும் அக்கினிக்
கிரையாக்கிக் கதருடுத்தார்
இருண்டரவு லட்சட்டம் வந்தவுடன் சர்க்காரை
யெதிர்த்து மனமே துடித்தார்.

ஷை பாட்டு எடுப்பு.

சகலமுந் துறந்தார் சந்யாசம் நிறைந்தார்
ஜவஹர் லாலேயும் மறந்தார் ஐயோ இறந்தார் (ஞா)

தொகையரா.

பரிகசித்திட்ட லார்டு பர்க்கன்ஹெட் மனம் பதைக்க
அரசியலமைப்பைச்செய்து அழிந்திடாப் பெருமை பெற்றார்
தெரிசனம் மஹாத்மா காந்தி சேனை முன்னணியில் நின்று
பிரசங்க ஆத்ம சாந்தி பெருகிட வணங்குவோமே.

பாட்டு.

பாரத மாதா பயின்ற நம்மேதா
பாஸ்கர சாமி சதா கொண்டாடுந் தாதா (ஞா)

---

சங்கீத ராணி

## மிஸ். K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

இராகம்-பியாகு—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சுப்—நாரதரே யம் மாதவள் தன் பேர்
யாதுரை செய்வீர் தீதணுகாமல் (நா)

கா—ஊரது சிற்றா ராகிடுங் கேளீர்
பேரது வள்ளி யென்பார்கள் (ஊர)

சுப்—சுந்தரி யாளின் தந்தையும் யாரோ
அந்த நங்கைசெய் யுந் தொழிலேதோ (சுந்)

கா—வனக்குற வேட ராஜனின் மகள்
தினைப்புனக் காவல் தினஞ் செய்கிறுள் (வன)

சுப்—சென்றிடிலோ யான் கொண்டிடு மோகம்
கண்டறிவார்களோ விண்டிடுவீரே (செ)

கா—ஜெனித்த துமக்கே தெரிந்திடுவீர்
வனத்தி லினித்தான் மணந்திடுவீர் (ஜெ)

---

## S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

இராகம்-சாவேரி—தாளம்-ஆதி.

பல்லவி.

சன்யா சம் சன் மார்க்கம்
சமரச மொடுபல விடபல புகழே (சன்)

அநுபல்லவி.

பொன்னுர் பயன் பெறும் என்னுர் தவ யோகம்
பொன்னுர் துயர்நிலே தன்னு லறியுஞ் (சன்)

சரணம்.

பொன்னொளிர் பூஷண பொக்கிஷ வாழ்க்கை
பொருந்து மிவையெலாம் நிலையிலா ஆக்கை
சொன்னு லடியவர் பெரும் புகழ் வாக்கை
சுதந்திர மெனக்கொள்ளுஞ் சித்தர்கள் சேர்க்கை (சன்)

உறையூர் ஆர்மோன்ய சரபம்.

**T. M. காதர்பாக்ஷா பாடிவரும்**

இராகம்-தேசிகதோடி—தாளம்-ஏகம்

பல்லவி.

ஓடிப்பிழைத்துப் போரேன் உன் பேரைச்சொல்லி (ஓ)

அநுபல்லவி.

ஓடிப்பிழைத்துப் போரேன் உன் பேரைச்சொல்லி (ஓ)

சரணம்.

காடு மலையுந் தாண்டி நாடு நகரமுந் தேடி (ஓ)

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஆண்டவர்களே ஹீத்து பாண்டவர்களே
கவனிக்கவும்.

மதுரை, N. S. பபூன் ஷண்முகம் பாடிய பிளேட் பபூன் பாட்டுக்கள் வெளிவந்துவிட்டது. 1, 2, 3 பாகங்கள் பாகம் 1-க்கு விலை அணு 0—2—0.

அநுபல்லவி.

திருவாரூர் உற்சவத்தில் தேரைத் தானேயோட்டிவைத்த (ஆ)

சரணம்.

காரணம் விளங்கும் பூரா
கப்பல் துறை நாகூரா
சார சரப முத்து
சாமிக் கவி விஸ்தாரா (ஆண்)

---

## திருக்கோகர்ணம்.

## T. N. மாணிக்கம் அவர்கள் பாடிவரும்

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

திருப்புகழ்.

முத்துநவ ரத்னமணி பத்திநிறை சத்தியிடம்
மொய்த்தகிரி முத்திதரு வெனவோதும்
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமூ வர்க்கசுர ரடிபேணி

நாதநாமக்கிரியை.

அத்தனுட னெத்தநட னித்ரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா
அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவளர்
அற்கனக பத்மபுரி பெருமாளே.

---

## மிஸ்டர் V. லக்ஷ்மணய்யர் பாடிவரும்

இராகம்-சண்முகப்ரியா—தாளம்-ஆதி.

பல்லவி.

மகிமைப்ர தாபா மயில் வாகனு

அநுபல்லவி.

மாவீரா சிங்காரா கெம்பீரா மலர்ப்பதமருள் (மகி)

சரணம்.

அகிலப்ர பஞ்சமீது அடிமையெந் தன்மேல்வாது
ஆகா துரீகா விவேகா அறுமுககுக (மகி)

சற்றுந் தயவில்லையா சண்முகா நீ சொல்லையா
சாதித்தல் சோதித்தல் எதித்ததி பதிலுரை (மகி)

வஞ்சிய ராலே மனம் வாடி யலைந்தேன் தினம்
வாதே செய்யாதே இப்போதே வரவெனதடை (மகி)

பக்தன் பழனிச்சாமி பாமாலை சூடும் நேமி
பண்பாய் என்முன்பாய் வந்தின்பாய் பவவினைதவிர் (ம)

---

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும் பூங்கா விநோத சிங்காரப் பாட்டு. 1, 2 பாகங்கள் பாகம் 1-க்கு 0—2—0.

மதுரை N. S. சண்முகம் பாடிவருகிற புதிய பிளேட் ஒரிஜினல் புதிய பவுன் பாட்டு 1, 2, 3 பாகங்கள் பாகம் 1-க்கு விலை அணு 0—2—0. கிடைக்கும் இடம்

V. கருப்பண பிள்ளை,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

முத்தமிழ் க்ஷேத்ரம்

## கோகிலகான. மிஸ். சுப்புலட்சுமி பாடிவரும்

சிந்து.

பாவட்டஞ் சோலையிலே மயில் வந்து
வாய்விட்டுக் கூவுதய்யா சுப்பய்யா
வாய்விட்டுக் கூவுதய்யா
தேரைச் சுற்றி பூமணக்குது
தென் பழனியிலே சுப்பய்யா
தென் பழனியிலே (பாவ)
எட்டடிக்குச்சுக்குள்ளே கந்தய்யா நான்
எத்தனை நாளிருப்பேன் சுப்பய்யா
எத்தனை நாளிருப்பேன்
மாமணக்குது தேன் மணக்குது
மாலைப் பழனியிலே சுப்பய்யா
மாலைப் பழனியிலே (பாவ)
ஓட்டைக் குடந்தனிலே ஒன்பது
பாட்டைகள் கண்டிருக்கும் அநித்திய
பாட்டைகள் கண்டிருக்கும்
கூட்டினிலென்னை வைத்து வினைப்பயன்
வாட்டுது பாருமையா சுப்பய்யா
வாட்டுது பாருமையா (பாவ)

ஆங்காரப் பேய் பிடித்து அடியேன்
அலைந்து திரியாமல் கந்தையா
அலைந்து திரியாமல்
ஓங்காரத்துள்ளிருக்கும் ஒரு வித
உண்மையைக் காட்டுமையா சுப்பையா
உண்மையைக் காட்டுமையா (பாவ)

---

திருசைமாநகர்

**M. M.** மாணிக்க பாகவதர் பாடிவரும்

நொண்டிச்சிந்து.

தேடிவந்தேன் வேடுவப்பெண்ணே—என் மானைத்
தேடி மிக்கத் தத்தளித்து வாடினேன் கண்ணே
மோடி நீயுஞ் செய்யப்படுமோ—பேசிடில்
முந்துகனி வாயின் முத்தஞ் சிந்தி விடுமோ
அடையாளஞ் சொல்லுகிறேன் கேள்—எந்தன் மான்
அந்த மான் சிவமுனிவர் தந்த கலைமான்
இடையுஞ் சிறுத்த மடமான்—விழிமான்
இந்த நற் றினைப்புனத்தே வந்த குறமான்

மதுரகவி V. நடராஜ பிள்ளை அவர்களால் இயற்றிய மதுரைவீரசுவாமி வர்ணிப்பு அவசியம் வாங்கிப் பாருங்கள்.
புக் 1-க்கு 0—2—0.

விரிந்த கொம் பிரண்டுள்ள மான்—கொம்பிரண்டு
மேவினுந் தலை நிமிர்ந்து பாய்ந்திடாத மான்
சிறந்த வடிவுடைய மான்—நலமான்
செந்திநகர்க் கந்தவேள் தனக்குவந்த மான்
மேனியிற் புள்ளியில்லாத மான்—ஜாகை
மீதினிற் காயாத புல்லை மேயாத பெண் மான்
அகிலத்தவர் புகலத்த குமான்—வனமான்
அமிர்தக்கிரி மதுரக்குயில் மொழி கற்றிடுமான்
சுகிர்த கல வியைப்பெற்றிடுமான்—குலமான்
சொலு மற்புதக் கவிகற்றவரு வந்திடுஞ்சற் குணமான்
கண்டதுண்டோ வள்ளிமானே—உன் பார்வையில்
கண்டாயோ இல்லையோ காதல் கொண்டதால் நானே (தே)

---

சங்கீத வித்வசிரோண்மணி

மதுரை, N. சுப்பிரமண்ய பாகவதர் பாடிவரும்

கலித்துறை.

வேதந் தனக்கு மதிமேன்மை யாய்நீ விரித் துரைக்கும்
போதந் தனைக்கொண் டெந்நாளும் நன்மை புரிந்து மலர்
பாதந் தனக்குத் துதி கூர்ந்து நிற்கும் பணிவிடைக்கே
நீ தந்த மோகம் அதுவே நற் காரணம் நேரிழையே.

---

இராகம்-கமாஸ்—தாளம்-ஆதி.

பல்லவி.

மகாரதி மருவச் சம்மதி
சகாவதி தருணமுன் செதி (மகா)

அநுபல்லவி.

ஜெகன் மோகினி தேவியே மானே
சித்தமே மகிழ்வாய் தித்திக்குஞ் செந்தேனே (மகா)

சரணம்.

காதலன்பு கூறி காப்பதுன் பாரம்
கடிந்தாலெவ்விதங் களைவேன் விசாரம்
பூதலமீதுண்மை புகன்றே னின்னேரம்
புனித பாஸ்கரன் சொல் லினிது பாராதாரம் (மகா)

---

## தேசபக்தன் S. S. விஸ்வனாத தாஸ் பாடிவரும்

### ஸீ. ஆர். தாஸ். சாயுஜ்ஜிய கீதம்.

இராகம்-இந்துஸ்தான்தோடி—தாளம்-ஏகம்.

பல்லவி.

இந்து நேச வங்கதேச பந்துவை யிழந்தனம்
என்ன காலமென்று ஓல மிட்டுமே தளர்ந்தனம் (இ)

அநுபல்லவி.

சென்றபோ மடந்தை வாழுந் தீரசித்த ரஞ்சனன்
சீர் மிகுந்த பாரதத்தாய் திலக நேத்ர அஞ்சனன்
ஈடிலாத் தங்கம்
எதிரிக்கோர் சிங்கம்
கிரீடிபோ லங்கம்
கீர்த்திப்ர சங்கம்
கேட்ட பேர் கண் ணீர் வடிக்க
நாட்டுளோர் மனந் துடிக்க (இந்)

தொகையறு.

ஆயிரத்தி யெண்ணூற்றி யெழுபது நன்னவம் பரைந்து
தேதி தன்னில்
அரும்பூயன் மோகனதாஸ் புத்திரரா யவதரித்து
அரிய கல்வி
நேயமுட னிருபதாம் வயதினிலே நேர்ந்ததிரு
நாம மோங்க
நிருதர்வளர் சீமையிலே படித்து சட்டமுறைகளை நன்
னீதி வாய்ந்தே
தூயகுண தாதா பாய் பார்லிமெண்டி லிடம்பெறவே
துணையாய் நின்றார்

இந்து முஸ்லீம் சோதரரை யிகழ்ந்தஜான் மக்ளீனை
துண்டிக்கச் செய்தார்
தேயமெல்லாங் கொண்டாடும்அரவிந்தர்கோஷின்கேஸ்
தனை ஜெயித்தார் மற்றும்
தேசபக்தர் கேசுகளில் தர்மவக்கி லெனவுழைத்தார்
தெய்வம் போலே.

(ஷை பாட்டு எடுப்பு)

அந்த தியாக மூர்த்தி வாழ்வும் போச்சே
அங்கம் வெந்து சாம்பலாச்சே (இ)

(தொகையரு)

கண்ணியவான் தந்தை பட்ட பதினாறு லட்சமணிக்
கடனைத் தானும்
திண்ணமுடன் சம்பாதித்து அனைவருக்கும்பாக்கியின்றி
தீர்த்துப் பின்னும்
எண்ணியதோர் பொருள்திரட்டி தானமீந்துழைத்துழையா
இயக்கம் போன்ற
புண்ணியவான் ஆஸ்தியெல்லாம் பொதுநலத்திற்கே
கொடுத்தார் புதுமை தானே.

(ஷை பாட்டெடுப்பு)

உடல் இறந்தால் மீண்டும் பிறந்து நாட்டில்
சிறந்த தொண்டு புரிவேனென்ற (இ)

(தொகையறு)

வங்காள ஆள் தூக்கிச் சட்டமது தொலையாத
வருத்தத் தாலே
இங்காருங் கவனிப்பாரில்லையெனப் பொன்னுலகி
லேகிச் சத்ரு
சங்கரா கடவுளுக்கும் கோகலேய்க்குந் திலகருக்குந்
தாதா பாய்க்கும்
பொங்காமற் பொங்கி முறையிடப்புகுந்தாரென்றுமனம்
பொறுப்போமையா.

(ஷை பாட்டு எடுப்பு)

பூவில் பாஸ்க ரன் சொல்லேந்தி
நாவிற் கூறு வேமே சாந்தி (இங்)

---

## V. S. ஞானம்பாள் பாடிவரும் 178229

### புதிய கதர் கீதம்.

கண்ணிகள்.

சூழ்ந்த சர்க்கா சுற்றுவோம்
துணிந்து கதர் நூலே
வாழ்ந்திடுஞ்சு தேசிய ஞான
மகாத்மா காந்திக்கு ஜே! ஜே!! ஜே!!! (சூழ்

பாரதத் தாய் • அம்பிகை
பஜனை பாடுவோமே
பாரதப் பண் பாத பத்ம
மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே (சூழ்)

காங்கிரஸில் கெம்பீர
கதர்ப்பிர மானந்தம்
மாம்பழந் தேன் வேல்ச்சாமி சொல்
மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே. (சூழ்)

---

இதன் தொடர்ச்சி 3, 4 பாகங்கள் அவசியம் வாங்கிப் பாருங்கள். புக் 1-க்கு 0—2—0.

---

மதுரை N. S. சண்முகம் பாடிய புதிய பிளேட் ஒரிஜினல் புதிய பவுன் பாட்டு 1, 2, 3, பாகங்கள். புக் 1-க்கு 0—2—0.

---